# Deposition of Witness

Chapter XXIII code of Criminal Procedure

**In the Court of District Munsif Cum Judicial Magistrate, Portonovo.**

**Case Number – CC 151/2014**

| | | |
|---|---|---|
| **Name** | : | **கண்ணன் , த–பெ. ரகுபதி** |
| **Village/Taluka** | : | **சென்னை** |
| **Age** | : | **47** |
| **Status** | : | **P.W. 22** |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 27.09.2021**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –** நான் சென்னையில் வசித்து வருகின்றேன். நான் தலைமை செயலகத்தில் ஒரு உணவகம் , எஸ்.டி.டி. பூத் மற்றும் Fax கடை வைத்து நடத்தி வருகின்றேன். கடந்த 2013 ம் ஆண்டு ஒரு நாள் கடலூர் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் கடைக்கு வந்து ஒரு சி.டி.ஆர் (Call Details Record) என்னிடம் காட்டி அதில் இருந்த என்னுடைய கடையின் Fax எண் 044–42013929 மற்றும் என்னுடைய Coin Box தொலைபேசி எண் 86829 07704 சம்பந்தமாக அதில் இருந்தது குறித்து என்னிடம் விசாரித்தார்கள். மேற்படி Fax எண்ணிலிருந்து Fax ஒன்று கடலூர் ஆட்சியர் அலுவலகத்திற்கு Fax ஒன்று அனுப்பப்பட்டு இருப்பதாகவும், அது தொடர்பான தகவல்கள் அளிக்குமாறும் என்னிடம் கேட்டார்கள். அந்த Fax னை 29.10.2013 அன்று அனுப்பப்பட்டது. அன்றைய தினம் மாலை கடை மூடும் நேரம் என்பதால் கடை ஆட்கள் இன்றி காலியாகத்தான் இருந்தது. ஒரு நபர் வந்து கடலூருக்கு Fax அனுப்ப வேண்டும் என்று கூறினார். அவர் எதிர்முனையில் Fax மிஷின் On செய்யப்படாமல் இருந்ததால் என்னுடைய கடையில் இருந்த Coin Box தொலைபேசி எண் 86829 07704 எண்ணிற்கு அந்த நபரே

தொடர்பு கொண்டு Fax மிஷின் On செய்ய சொன்னார். அதன் பிறகு Fax அனுப்பப்பட்டுவிட்டது. அந்த நபரை என்னால் இப்பொழுது அடையாளம் காண்பிக்க முடியும். தற்பொழுது நீதிமன்ற வளாகத்தில் அந்த நபர் இல்லை (எதிரிகள் A1- அருளப்பராஜ், A5- ஏ.டி.எஸ். ராஜா ஆகியோர்கள் ஆஜரின்மையால் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.) அதன் பிறகு விசாரணையின் பொழுது தான் எனக்கு Fax ல் அனுப்ப கொடுக்கப்பட்ட நெம்பர் கடலூர் ஆட்சியர் அலுவலகத்தின் நெம்பர் என்று தெரியவந்தது. அந்த நபரை போலிசார் என் கடைக்கும் அழைத்து வந்திருந்தனர். நான் அப்பொழுது அவரை அடையாளம் காண்பித்தேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

**1, 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** நான் வைத்திருக்கும் கடையில் Fax யார் வேண்டுமானாலும் அனுப்ப முடியுமா என்றால் யாருக்கு அனுப்புகிறீர்கள் என்று கேட்ட பிறகு தான் அனுப்பப்படும். ஒரு நாளைக்கு சுமாராக 5 முதல் 10 Fax அனுப்பப்படும். சம்பவம் நடந்த தினத்தன்று சுமாராக 10 Fax சென்றிருக்கும். அன்றைய தினத்தில் அந்த 10 Fax யார் யாருக்கு அனுப்பப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் என்னிடம் கொடுத்த Fax அனுப்ப கொடுத்த நபர் கடலூருக்கு அனுப்ப வேண்டியது என்று சொல்லி தான் கொடுத்தார். Fax ஆனது அலுவலகம் சம்பந்தமாக அனுப்பப்பட உள்ளது என்று என்னிடம் அந்த நபர் கூறினார். என்னுடைய Fax கடை அரசாங்க கடை அல்ல, தனியார் கடை தான். Fax னை பெறுபவர் என்னுடைய கடையின் Fax நெம்பரை வைத்து இது தனியார் கடை தான் என்று அடையாளம் கண்டுபிடிக்க இயலுமா என்றால் அவ்வாறு கண்டுபிடிக்க முடியும். Fax என்னுடைய கடையிலிருந்து அனுப்பப்பட்ட காரணத்தினால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நானும் உடைந்தையாக

இருந்த காரணத்தினால் நானும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்க வேண்டும் என்றால் கடை மூடும் நேரமாக இருந்ததால் அதிலிருந்த விவரங்கள் எனக்குத் தெரியாது. குற்றவாளிகள் அவ்வாறு தவறான செயலில் ஈடுபடவில்லை என்றாலும் புகார்தாரரே என்னிடம் சொல்லி சாட்சியாக சேர்த்துள்ளனர் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** நீதிமன்றத்திலிருந்து எப்பொழுது எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் தேதி நினைவில்லை, சுமாராக 10, 15 நாட்கள் இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை 2014 ம் தேதி விசாரணை செய்தனர். எந்த தேதி என்று எனக்கு நினைவில்லை. 29.10.2013 என்ற தேதியானது எனக்கு எவ்வாறு குறிப்பாக ஞாபகம் உள்ளது என்றால் சி.டி. ஆர் காண்பித்து அது பற்றி என்னிடம் கேட்டதால் அது எனக்கு ஞாபகம் உள்ளது. சி.டி. ஆர் தற்பொழுது என்னிடம் கையில் இல்லை. யாரும் எனக்கு இது பற்றி எதுவும் சொல்லித் தரவில்லை என்றால் சரிதான். எனது கடைக்கு சுமாராக ஒரு நாளைக்கு 100 லிருந்து 500 பேர் வரை வருவார்கள். நான் நடத்தும் உணவகத்தில் சுமார் 10, 15 நபர்கள் வேலை செய்கிறார்கள். Fax கடையில் ஒரு நபர் தான் வேலை செய்கிறார். தினசரி ஒரு நாளைக்கு 500 நபரை பார்க்கும் நபரால் வருபவரின் முகத்தினை ஞாபகம் வைத்திருக்க சாத்தியம் இல்லை என்றால் கடை மூடும் நேரத்தில் வந்ததால் எனக்கு அவரின் முகம் ஞாபகம் உள்ளது.

**அரசு தரப்பில் மறு விசாரணை –** இல்லை.

**<u>Deposition of Witness</u>**

<u>Chapter XXIII code of Criminal Procedure</u>

**<u>In the Court of District Munsif Cum Judicial Magistrate, Portonovo.</u>**

**Case Number – CC 151/2014**

| | |
|---|---|
| **Name** | **: சுரேஷ், த–பெ. கிருபாபுரி** |
| **Village/Taluka** | **: சென்னை** |
| **Age** | **: 42** |
| **Status** | **: P.W. 23** |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 27.09.2021**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை –</u>** நான் தற்பொழுது சென்னையில் குடியிருந்து வருகின்றேன். நான் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் நீதிபதியின் கார் ஓட்டுநராக வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரி முருகேசனை எனக்குத் தெரியும். தேதி நினைவில்லை, 5 , 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் அலுவலகத்திலிருந்து டீ சாப்பிடுவதற்காக வெளியே வந்தேன். அப்பொழுது ஆஜர் எதிரி முருகேசன் அந்த டீக்கடையில் நின்று கொண்டிருந்தார். என்னுடைய சொந்த ஊர் பரங்கிப்பேட்டை அருகில் உள்ள அகரம். எதிரி முருகேசனும் அதே ஊரைச்சேர்ந்தவர் என்ற முறையில் அவரை எனக்குத் தெரியும். டீக்கடையில் நின்றிருந்த முருகேசனிடம் இங்கு என்ன வந்து இருக்கிறீர்கள் என்று விசாரித்தேன். எங்கள் அலுவலகத்தில் ஏதோ உத்திரவு கொடுத்துவிட்டார்கள். அதற்காக உயர்நீதிமன்றத்தில் ஜாமீன் எடுக்க வந்து உள்ளதாக என்னிடம் கூறினார். நான் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டேன். போலிசார் என்னை கடலூர் வரச்சொன்னார்கள். அது பற்றி விசாரித்தார்கள்.

**1 , 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** முருகேசன் மட்டும் தான் என் ஊர்காரரா என்றால் வேறு யாரும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர் இந்த ஊரைச்சேர்ந்வர்கள் இல்லையா என்றால் இருவரும் ஊர்காரர்கள் தான் ஆனால் நர்ன முருகேசனை மட்டும் தான் பார்த்தேன். இவ்வழக்கில் என்னை சாட்சியாக விசாரிப்பதற்கு காரணம் முருகேசன் என்னை வந்து சந்தித்து ஆகும். இது சம்பந்தமாக என்னை சுமாராக 5 வருடங்களுக்கு முன்பு போலிசார் விசாரித்தனர். அதன் பிறகு வேறு எங்கும் என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் நான் முருகேசனை பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதற்காக முருகேசன் ஜாமீன் எடுக்க வந்தார் என்று எனக்கு தெரியாது. எனவே, அதனை கேட்க கூடிய சூழ்நிலையில் நான் இல்லை.

**3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** அ.சா. 3 கனகசபை எனது உறவினர் ஆவார், அவரை எனக்குத் தெரியும். அ.சா. வசந்தஜோதி அ.சா. 3 ன் மனைவி என்றால் சரிதான். அவர்கள் எனக்கு உறவினர் என்றால் சரிதான். எதிரிகள் மீது வழக்கு போடப்பட்ட பிறகு தான் நான் முருகேசனை பார்த்தேன். நான் கனகசபைக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை –** இல்லை.

**<u>Deposition of Witness</u>**

<u>Chapter XXIII code of Criminal Procedure</u>

**<u>In the Court of District Munsif Cum Judicial Magistrate, Portonovo.</u>**

**Case Number – CC 151/2014**

**Name** : **முகமது அப்துல் காதர்,**

**த–பெ. முகமது இப்ராஹிம்**

**Village/Taluka** : **சென்னை**

**Age** : **60**

**Status** : **P.W. 24**

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 27.09.2021**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை –</u>** நான் சென்னையில் வசித்து வருகின்றேன். நான் browsing center வைத்து நடத்தி வருகின்றேன். தேதி நினைவில்லை, சுமார் 7 , 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் கடலூரிலிருந்து போலிசார் ஒரு நபருடன் என் கடைக்கு வந்தார்கள். 29.10.2013 ம் தேதி இந்த நபர் browsing செய்ய இங்கு வந்தாரா என்று அவருடன் அழைத்து வந்த நபரை காட்டி என்னிடம் கேட்டார். நான் பொதுவாக கடைக்கு வரும் நபர்களிடம் பெயர், தொலைபேசி எண், ஆகியவற்றை வாங்கி அதனை பதிவேட்டில் பதிந்து கொள்வேன். மேற்படி நபர் எனது browsing center க்கு சுமார் 2, 3 முறை வந்து இருக்கிறார். அந்த நபரை நான் அடையாளம் காண்பித்தேன். பொதுவாக browsing செய்ய வரும் நபர்களுக்கு பிரிண்ட் நாங்கள் எடுத்து கொடுப்பது தான் வழக்கம். ஆனால் மேற்படி நபர் அவராகவே அன்றைய தினம் A4 Paper க்கு பதிலாக A3 Paper க்கு பிரிண்ட் கொடுத்துவிட்டதால் பேப்பர் மாட்டி பிரிண்டர் ஸ்டெக் ஆகி விட்டது. அதனால் நான் அந்த நபரிடம் சண்டை போட்டேன். அதனால் அந்த நபரின் முகம் எனக்கு நினைவில் உள்ளது. அந்த நபரை எனக்கு தற்பொழுது

அடையாளம் காட்ட முடியும். அந்த நபர் தற்பொழுது நீதிமன்ற வளாகத்தில் இல்லை. (எதிரிகள் A1- அருளப்பராஜ், A5- ஏ.டி.எஸ். ராஜா ஆகியோர்கள் ஆஜரின்மையால் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.) தற்பொழுது என்னிடம் காட்டப்படும் browsing செய்ய வரும் நபர்கள் பற்றிய Log Book எங்களுடைய browsing center ல் பராமரிக்கப்படுவது தான். அதில் உள்ள வரிசை எண்கள் 18 மற்றும் 25 இந்த வழக்கின் சம்பவம் தொடர்பு உடையது தான். மேற்படி Log Book **அ.சா.ஆ. 83 வரிசை** ஆகும். போலிசாரிடம் மேற்படி நபர் எண் கடைக்கு வந்து browsing செய்ய வந்த விவரம் கூறினேன். அவரிடம் அந்த நபரை அடையாளம் காண்பித்தேன். என்னிடம் Log Book Original வேண்டும் என்று போலிசார் கேட்டனர். அதனால் நான் அதனை ஜெராக்ஸ் எடுத்து Log Book ல் வைத்துக்கொண்டு Original யை போலிசாரிடம் ஒப்படைத்தேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – browsing center ல் திடிரென்று யாராவது வந்து கேட்டால் Log Book னை கொடுத்துவிடுவேனா என்றால் அவ்வாறு கொடுக்க மாட்டேன். ஒரு நாளைக்கு சுமாராக 100 நபர்கள் வருவார்களா என்றால் 20 லிருந்து 25 நபர்கள் வருவார்கள். ஒரு சில நபர்கள் பிர்ண்ட் அவுட் ஒரு நாளைக்கு தவறாக எடுப்பார்கள் என்றால் என்றாவது ஒரு நாள் அது போன்று நடக்கும். என் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் பெயர், செல் நெம்பர் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு தான் கடையில் அனுமதிப்பேன் என்றால் சரிதான். அந்த லாக் புக்கில் அன்று கடையில் பிரச்சனை செய்தவர் அவரின் முகவரியை குறிப்பிட்டு சென்றதால் தான் எனக்கு அவரை தெரியும் என்றால் அவரின் முகம் என்னிடம் சண்டையிட்டதால் எனக்கு ஞாபகம் உள்ளது. எனக்கு

ஊர் சென்னை ஆகும். போலிசார் எத்தனை முறை வந்து என்னை விசாரித்தனர் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. அதன் பிறகு போலிசார் என்னை பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த மாதம் 3 ம் தேதி தான் எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அதற்கு முன்னர் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னை சாட்சியாக சேர்க்க வேண்டும் என்பதற்காக என்னை வற்புறுத்தி தான் போலிசார் என்னை சாட்சியாக சேர்த்து Log Book னை போலிசாரே தயார் செய்து கொடுத்தனர் என்றால் சரியல்ல, அதில் எதிரியின் கையொப்பம் உள்ளது. Log Book னை போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க தான் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். என் மீது போலிசார் வழக்கு எதுவும் போட்டுவிடுவார்கள் என்று பயந்து கொண்டு தான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**எங்களுடைய கடையில் browsing செய்ய வருபவர்களின் விவரங்களை எழுதுவற்கு சரியான நோட்டு பராமரிக்கின்றேன், அதற்கு பக்கங்கள் உண்டு தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பக்கம் எத்தனையாவது பக்கம் அந்த நோட்டில் உள்ளது என்றால் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் 83 வரிசையானது லாக் புக்கில் உள்ள சில பக்கங்கள் ஆகும். பக்கங்கள் எவ்வாறு குறிப்பிடப்படும் என்றால் தேதி வாரியாக குறிப்பிடப்படும். என்னிடம் காட்டப்படும் பக்கங்கள் போலிசாரே என் கடையிலிருந்த பேப்பரை எடுத்து தயார் செய்தனர் என்றால் சரியல்ல. என் கடைக்கு அன்றைய தினம் வந்த நபர் browsing செய்து பிரிண்ட் எடுக்க வந்தார். எங்கள் கடையில் நாங்கள் தான் பிரிண்ட எடுத்துக்கொடுப்போம். வாடிக்கையாளர் பிரிண்ட் எடுக்க

அனுமதிப்பதில்லை. பிரிண்ட் எடுக்க பிரிண்டர் அருகில் கடைக்கு வந்த நபர் செல்ல இயலாது என்றால் சரியல்ல. அவராக தான் பிரிண்ட் எடுத்துக் கொண்டார். எனது முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் போலிசாரிடமும் என் கடைக்கு வந்த நபர் என்னிடம சண்டையிட்டதால் தான் அந்த நபர் முகம் ஞாபகம் உள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. நான் போலிசார் சொல்லிக்கொடுத்து தான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், அ.சா.ஆ. 83 வரிசை என் கடையில் பராமரிக்கப்படும் லாக் புக் இல்லை என்றாலும் அவை லாக் புக்கிலிருந்து கிழிக்கப்பட்டு வந்த பக்கங்கள் இல்லை என்றாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை –** இல்லை.